396

சமாதானத்திற்கான

# ஐம்பெரும் கோட்பாடுகள்

V2,4 N24
N55
181293

மேஷ் சந்திரா

நவம்பர் 1954

விலை 2 அணு

ஜனசக்தி பிரசுராலயம்
சென்னை-14.

# சமாதானத்திற்கான ஐம்பெரும் கோட்பாடுகள்

"1954-ம் ஆண்டு இதற்காக சரித்திரத்தில் இடம்பெறும்! டில்லியில் நடந்த நேரு–சௌ என்–லாய் சந்திப்பின் காரணமாகவே என்றுதான் எனக்குத் தோன்றுகிறது"

—லண்டன் டெய்லி ஹெரால்டில், ஆலன் டெய்லர்

இரு நாடுகளின் பிரதம மந்திரிகள் சந்தித்துப் பேசுவது ஒன்றும் அசாதாரணமான விஷயமல்ல. இத்தகைய சந்திப்புகள் அடிக்கடி நடக்கின்றன. ஆயினும் 1954 ஜூனில் பிரதம மந்திரிகள் நேருவும், சௌ யென்-லாயும் சந்தித்தது, சமீப வருடங்களில் சர்வதேச விவகாரங்களில் நிகழ்ந்த எந்த நிகழ்ச்சியையும் விட அனேகமாக மிகப்பெரிய அளவிற்கு உலகின் கவனத்தை ஆகர்ஷித்துள்ளது எனலாம். இந்த நிகழ்ச்சி; ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்படுவதோ அன்றி நிறுத்தப்படுவதோ போன்ற அத்தகைய பெரிய சம்பவம் அல்ல. உண்மையில், பெர்லினிலும் பிறகு ஜினீவாவிலும் நடந்த வல்லரசுகளின் மகாநாட்டுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கக்கூட முடியாது என்பது வெளிப்படை.

இருப்பினும், புது டில்லியில் நடந்த நேரு-சௌ சந்திப்பு சமீப வருடங்களில் நடந்த சம்பவங்கள் யாவற்றையும்விட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று எல்லோராலும் போற்றப்படுகிறது. இதற்குக் காரணமென்ன ?

முதலாவதாக இது வெறுமனே இரண்டு பிரதம மந்திரிகளுக்கிடையில் நடந்த சந்திப்புமட்டு மல்ல. மனித குலத்தில் கிட்டத்தட்ட சரிபாதியினரைக் கொண்டுள்ள இரு பெரும் நாடுகளின் பிரதம மந்திரிகளின் சந்திப்பு இது.

இரண்டாவதாக வேறுபட்ட பொருளாதார, சமூக அமைப்புகளைப் பின்பற்றும் இரு அரசுகளுடைய பிரதிநிதிகளின் சந்திப்பு இது.

மூன்ருவதாக இந்த சந்திப்பும் சம்பாஷணையும், வெறும் உபதேசங்களுடன் நின்றுவிடவில்லை; உண்மையில் ஒரு தீர்க்கமான உடன்

பாட்டில் முடிந்துள்ளது. இந்த உடன்பாடு சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கிடையில் நட்புறவை ஏற்படுத்துவதற்கானது மட்டுமல்ல; உலக சமாதானத்தைப் பேணிப் பாதுகாக்கும் நிலையாய கடமையில் ஒத்துழைப்பதற்காகவும் ஏற்பட்டதாகும்.

நான்காவதாக எல்லாவற்றிற்கும் மேலாக, இச் சந்திப்பு உலக மக்களுக்கு நம்பிக்கையை மூட்டும் ஒரு புதிய பாதையை ஒளி நிறைந்ததாக்கியது. இப்பாதை பரஸ்பர அவநம்பிக்கையை ஏற்படுத்தும், பாதையல்ல; இராணுவக் கூட்டுறவுகளையும் ஒப்பந்தங்களையும் ஏற்படுத்தும் பாதையல்ல; உலக மக்களை ஒருவருக்கெதிராக ஒருவரைப் பிரிவினை செய்யும் பாதையல்ல. மாறாக, உலக மக்களை ஒன்றுபடுத்தும், சர்வதேச மோதல்களை சமாதான பூர்வமாக தீர்த்துக்கொள்வதற்கு உத்தரவாதமளிக்கும் இப்பொழுதுள்ள எல்லைக்கோடுகளை அங்கீகரித்து அவற்றிற்கு உத்திரவாதமளிக்கும் பாதை அது. உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கு எதிராக சகல நாடுகளுக்கும் உத்திரவாதமளிக்கிறது அப்பாதை. மேலும் அது, சமத்துவ அடிப்படையில் பரஸ்பரம் உதவி புரிந்துகொள்வது என்னும் பார்வையைக் கொடுக்கிறது. வெவ்வேறு சமூகப் பொருளாதார அமைப்புகளைப் பின்பற்றும் நாடுகள் சமாதானத்துடன் உலகில் வாழமுடியும் என்னும் மகத்தான கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பாதை அது.

இந்தப் புதிய சமாதானப் பாதையின் அஸ்திவாரம் போன்றது, இருநாட்டுப் பிரதமர்களின் பிரகடனத்திலுள்ள ஐம்பெரும் கோட்பாடுகளே யாகும். இதை பிரதம மந்திரிகளின் கூட்டறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் இக் கோட்பாடுகளை சர்வதேச உறவுகள் விஷயத்தில் பொதுவாகப் பிரயோகிப்போமேயானால், அதன் விளைவாக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் திடமான அஸ்திவாரம் ஏற்பட முடியும் என்றும், இவ்வாறு இன்றுள்ள பயமும் தப்பெண்ணங்களும் மறைந்து அதற்குப் பதில் நம்பிக்கை உணர்வு இடம்பெற முடியும் என்றும், அக் கூட்டறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

பண்டித நேருவை சந்தித்ததற்குப் பிறகு, உடனடியாக பர்மீயப் பிரதமர் நு அவர்களுடன் பிரதமர் சௌ யென்-லாய் ஆலோசனை நடத்தினர். இதன் விளைவாக தாகின் நுவும் அவரது சர்க்காரும் மேற்கூறிய ஐந்து கோட்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு, அவற்றைப் பின்பற்றுவதென முடிவுசெய்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து ஒரு சில நாட்களுக்குப் பிறகு, வியத்நாம் மக்கள் குடியரசின் தலைவர் ஹோசிமின்னும், திரு. சௌ யென்-லாயும் சந்தித்துப் பேசினர். இதன் விளைவாக, ராஷ்டிரபதி ஹோவும் அவரது அன்னியநாட்டு மந்திரியும் ஐம்பெருங்கோட்பாடுகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். பத்திரிகைச் செய்திகள் இதை அறிவித்துள்ளன.

இந்தோனேஷ்யாவின் "டுடா மஸ்ஜர் காட்"டும் 'ஹரியன் ராக்ஜாட்'டும், பர்மாவின் "நேஷனும்", ஜப்பானின் "ஏஷியாடிக் ஈவனிங் நியூகும்" பாக்தாத்தின் "சேடல் அக்பரும்" போன்ற ஏராளமான பத்திரிகைகள், நேரு—சௌ சந்திப்பையும் ஐம்பெரும் கோட்பாடுகளையும் ஆதரித்துத் தலையங்கங்கள் தீட்டின. கோடிக்கணக்கான ஆசிய மக்களின் ஏகோபித்த ஆதரவை இத்தலையங்கங்கள் பிரதிபலித்தன.

மேலை நாடுகளின் முற்போக்கு வட்டாரங்கள் இந்த ஐம்பெரும் கோட்பாடுகளை, சமாதானத்திற்கு ஆக்கமளிக்கும் மிக முக்கியமான சேவையென வாழ்த்தி வரவேற்றன.

"நியூ ஸ்டேட்ஸ்மென் அண்டு நேஷன்" என்னும் பத்திரிகை பின்வருமாறு எழுதியது:—

> "ஆசியாவின் இரு ராஜதந்திரிகளின் சந்திப்பு, மேலை நாடுகளின் இரு ராஜதந்திரிகளின் சந்திப்புக்கு (ஐசன்ஹோவர் சர்ச்சில் சந்திப்புக்கு) ஒப்பான முக்கியத்துவம் பெற்றுள்ளதான து, நவீன கால சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவையாகும்."

ஐம்பெரும் கோட்பாடுகளைப்பற்றி, பிரிட்டிஷ் சமாதானக் கமிட்டியின் செயலாளர் வில்லியம் வெயின்ரைட் பின்வருமாறு கூறினார்:

> "இந்தக் கோட்பாடுகள் உலகெங்கணும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டால், மனிதகுலம் இன்று அவதியுற்றுவரும் கஷ்டங்களிலிருந்து வெளியேறுவதற்கு பெரும் அளவுக்கு உதவியாகவிருக்கும் என்பதில் ஐயமுண்டோ?"

சோவியத் செய்திப் பத்திரிகை பிரவ்தா, ஐம்பெரும் கோட்பாடுகளைப்பற்றி பின்வருமாறு எழுதியது:

> "இந்த மிகவும் முக்கியமான கோட்பாடுகளை ஆசிய நாடுகளும் இதர நாடுகளும் அங்கீகரிப்பதன் மூலம், நிச்சயமாக யுத்த அபாயம் குறையும்; சர்வதேச நெருக்கடி நிலைமை தணியும்; தேசங்களுக்கிடை ஒத்துழைப்பு ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகரிக்கும்."

ஆசியாவை நீண்ட நெடுங்காலமாக ஆட்டிப்படைத்துவந்த வல்லரசுகளிடையில், நேரு-சௌ சந்திப்பையும், ஐம்பெரும் கோட்பாடுகளையும்பற்றி ஏற்பட்டுள்ள பிரதிபலிப்புங்கூட, இந்த மகத்தான சந்திப்பின் மாபெரும் முக்கியத்துவத்தையும் அதன் விளைவாக ஏற்பட்ட தீர்க்கமான பலாபலன்களையும் தெற்றெனக் காட்டுகின்றன. "தென்கிழக்கு ஆசியப் பாதுகாப்பு அணி" எனப்படும் தங்களின் ஆக்கிரமிப்பு அணியை நிறுவுவதற்கு, இன்று ஏகாதிபத்திய அரசுகள் ஜன்னிவேகத்தில் முயற்சித்து வருகின்றன. அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் விசுவாசமிக்க ஆதரவாளரான இலங்கைப்

பிரதமர், "ஸியேட்டோ"வுக்கு (S.E.A.T.O.) இந்தியாவின், இதர கொழும்பு அரசுகளின் ஆதரவைப் பெறுவதற்குத் தீவிர முயற்சிகள் செய்து வருகிறார். ஆனால் அவர் வெற்றியடையவில்லை.

போர்த்துகீசிய சர்க்கார், அட்லாண்டிக் ஆக்கிரமிப்பு அணியின் ஆங்கிலோ - அமெரிக்கத் தலைவர்களின் நேரடியான ஆதரவுடனும், உதவியுடனும், இந்தியாவிலுள்ள தனது சிறு திட்டுப்பிரதேசங்களில் இராணுவங்களைக் குவித்து வருகிறது; இறுமாப்புடன் இந்தியாவை பயமுறுத்தியும் அவதூறு செய்தும் வருகிறது. பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவின் "நண்பன்" என்னும் தனது முகமூடியைத் தூக்கியெறிந்துவிட்டு, போர்த்துகல்லுக்கு எதிராகப் பலாத்காரத்தில் ஈடுபடுவதாக இந்தியாவின்மீது குற்றம் சாட்டத் துணிந்துள்ளது.

அமெரிக்க - பாக் ஒப்பந்தமும், பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்க சர்க்காரின் பிடிப்பு அதிகரித்துவருவதும், பாகிஸ்தானில் இந்தியாவுக்கு எதிராக யுத்த ஜன்னி வெகுவாக அதிகரிப்பதற்குக் காரணமாகியுள்ளன. இது சம்பந்தமாக அமெரிக்காவின் "நியூயார்க் டைம்ஸில்" வெளியான ஒரு செய்தித் துணுக்கு குறிப்பிடத்தக்கது. "இராணுவபூர்வமான யுத்தங்கள்" இன்னமும் நடந்துவரும் இடங்களை, அப்பத்திரிகை மகிழ்ச்சி பொங்க சுட்டிக் காட்டியது. இதில் காஷ்மீரைப்பற்றி விசேஷமாகக் குறிப்பிட்டு விட்டு, நிலைமை வெளித்தோற்றத்தில் காணப்படுவதுபோல் அவ்வளவு சமாதானம் நிறைந்ததாக இல்லை என்று களிப்புடன் விமர்சனம் செய்தது.

இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கையின் நல்ல அம்சங்களுக்கு எதிராகவும், இந்த முற்போக்கு நடவடிக்கைகளை தலைகுப்புற மாற்றுவதற்காகவும், நம் நாட்டில் மிகப்பெரிய அளவுக்குப் பிரசாரம் முடுக்கிவிடப்பட்டு வருகிறது. ஏராளமான அளவுக்கு, என்றையும் விட அதிகமாக, டாலர்கள் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன என்பது வெளிப்படை!

எனவே, உலகெங்குமுள்ள சாமான்ய மக்களின் இதயங்களிலே மிகப்பெரிய அளவுக்கு நம்பிக்கைச் சுடரை ஏற்றிவைத்துள்ளதுடன், உலக மக்களின் சுதந்திரத்தை ஒடுக்குவதன் மூலமே உயிர்வாழ வேண்டியுள்ளவர்களின் இதயங்களிலே ஆத்திரத்தையும் வெறுப்பையும் கொந்தளிக்கச் செய்துள்ள இந்த அதி அற்புதக் கோட்பாடுகள் தான் என்ன?

# ஐம்பெரும் கோட்பாடுகள் அறிவிப்பதென்ன ?

"இந்தக் கோட்பாடுகள், இன்னமும் விரிவான துறைகளில், அங்கீகரிக்கப்பட்டால்—பிறகு, யுத்த அபாயம் மறைந்துவிடும் ; தேசங்களுக்கிடையில் ஒத்துழைப்பு மனோபாவம் வளரும்."

—பிரதமர் நேரு

"இந்த ஐந்து கோட்பாடுகளின் அடிப்படையில் உலகின் சகல நாடுகளும்—அவை பெரியவையாயினும் சரி, சிறியவையாயினும் சரி, பலம் பொருந்தியவையாயினும் சரி, பலம் குறைந்தவையாயினும் சரி, அவற்றில் ஒவ்வொன்றும் எந்தவித சமூக அமைப்பை உடையதாயினும் சரி—சமாதானபூர்வமான சகஜீவிகளாக வாழமுடியும் என்பது நமது கருத்து. ஒவ்வொரு நாட்டு மக்களுடைய சுதந்திரமும், சுயநிர்ணய உரிமையும் கௌரவிக்கப்பட வேண்டும்......இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில், சகல நாடுகளும் தமது பரஸ்பர உறவுகளை அமைத்துக்கொள்ளுமேயானால், ஒரு தேசம் மற்றொரு தேசத்தை பயமுறுத்துவதும் ஆக்கிரமிப்பதும் நடைபெறாது ; உலகிலுள்ள சகல நாடுகளும் சமாதானபூர்வமான சகஜீவிகளாக வாழ்வதென்பது ஒரு சாத்தியப்பாடாக இருப்பதிலிருந்து நடைமுறை யதார்த்தமாக மாறிவிடும் என்பது உறுதி."

—பிரதமர் சௌ யென்-லாய்.

*நேரு-சௌ ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும், இன்று பர்மாவினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுமான இந்த ஐந்து கோட்பாடுகளையும் சரிவர பரிசீலித்துப் பாருங்கள். அக்கோடுபாடுகளாவன:*

(1) *ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டின் பிரதேச கட்டுக்கோப்பிற்கும், அரசுரிமைக்கும் பரஸ்பரம் கௌரவ மளித்தல்.*

(2) *பரஸ்பர—அனாக்கிரமிப்பு,*

(3) *பரஸ்பர அடிப்படையில், ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.*

(4) சமத்துவமும் பரஸ்பர அனுசரணையும்.

(5) சமூகப் பொருளாதார அமைப்பில் வேறுபாடுகளிருந்தாலும் பரஸ்பரம் சமாதான பூர்வமான சக-ஜீவிகளாக வாழ்தல்.

பண்டித நேரு, 1954 ஜூலை 7-ந் தேதியன்று, பிரதேச காங்கிரஸ் கமிட்டிகளின் தலைவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், இந்திய சீன ஒப்பந்தத்தின் ஐம்பெரும் கோட்பாடுகளை "புத்திபூர்வமாகக் கிரகித்து அறிந்து கொள்ளவேண்டும்" என்று அறைகூவினர். இந்தக் கோட்பாடுகள் சர்வதேச உறவுகளுக்கு அடிப்படையாகவுள்ள சமாதான சாஸனமாக விளங்கவேண்டுமெனில், பண்டிதநேரு கோரியுள்ளதுபோல் இவற்றை புத்திபூர்வமாக கிரகித்து அறிந்துகொள்வது முற்றிலும் அவசியம்.

இந்திய-சீனப் பிரதமர்களின் கூட்டறிக்கை கூறுவதாவது:—

".....பிரதேசக் கட்டுக்கோப்பு, தேசிய அரசுரிமை, அனுக்கிரமிப்பு ஆகியவை உத்திரவாதம் செய்யப்பட்டுள்ள நிலையில், சம்பந்தப்பட்ட நாடுகள் சமாதான பூர்வமான சகஜீவிகளாக வாழ்வதுடன்; நட்புறவுகள் கொண்டுமிருக்கும்."

பிரதமர் சௌயென்—லாயை கௌரவிக்கும் பொருட்டு நடத்தப்பட்ட அரசாங்க விருந்தின்போது, பிரதமர் நேரு கூறினர்:—

"மக்களை வாட்டிவரும் யுத்தபீதியையும் ஆக்கிரமிப்பு பீதியையும் அகற்றி ஒவ்வொரு நாடும் இதர நாடுகளில் தலையிடாமல் தனது சொந்த விருப்பங்களின்படி தனது வாழ்வை நிர்மாணித்துக்கொள்ள சுதந்திரமுண்டு என்பதற்கு நாம் உத்திரவாதம் அளிக்கமுடிந்தால், நாம் நமது தலைமுறையினருக்கு நன்கு பணியாற்றினவர்களாவோம் என்பதுடன், உலகில் நிலையான சமாதானத்திற்கு அஸ்திவாரமிட்டவர்களுமாவோம்".

உண்மையில், ஐம்பெரும் கோட்பாடுகள் யுத்த, ஆக்கிரமிப்பு பீதிகளை அகற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

1. முதல் கோட்பாடு சகல நாடுகளின் சுதந்திரத்திற்கும் உத்திரவாதமளிக்கிறது. எல்லா நாடுகளும் சுதந்திரமாயிருந்தாலன்றி நிலையான சமாதானம் இருக்கமுடியாது. ஒவ்வொரு நாட்டின் பிரதேச கட்டுக்கோப்புக்கும் அரசுரிமைக்கும் உத்திரவாதமளிக்காவிட்டால், எப்பொழுதுமே பீதியும் அவநம்பிக்கையும் இருக்கத்தான்செய்யும்; இதன் காரணமாக யுத்த தயாரிப்புகளும், இராணுவக் கட்டாளிகளும், ஆயுத சேகரிப்பும் ஏற்படாமலிருக்கமுடியாது.

2. இரண்டாவது கோட்பாடு; ஆக்கிரமிப்பு ஏற்படாதிருக்க உத்திரவாதமளிக்கிறது. இத்தகைய உத்திரவாதத்தின்மூலமே, யுத்

தத்தை அசாத்தியமாக்கக்கூடிய சமாதான ஒதோஷ்ணநிலை ஏற்பட முடியும்.

3. ஒவ்வொரு நாடும் தத்தம் சொந்த வழியில், வளர்ச்சியடைவதற்கு, பரிபூரண சுதந்திரமுண்டு; அன்னியர்கள் நேரிடையாகவோ அன்றி மறைமுகமாகவா உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாத நிலையில் ஒவ்வொரு நாடும் தம் மக்கள் விரும்பும் எந்தவித அரசியல் பொருளாதார அமைப்பையும் பின்பற்றுவதற்கு உரிமையுண்டு. இதையே மூன்ருவது கோட்பாடு ஊர்ஜிதம் செய்கிறது.

4. பேதாபேதமின்றியும், தடைகளும் கட்டுப்பாடுகளுமின்றியும் தேசங்களுக்கிடையில் சகஜபூர்வமான பொருளாதார, கலாச்சார உறவுகளை வளர்த்துக்கொள்ளுவதற்கு நான்காவது கோட்பாடு உத்திரவாதமளிக்கிறது. இந்த உறவுகள், வளர்ச்சியடையாத பின்தங்கிய நாடுகளை, ஏகாதிபத்திய அரசுகள் சுரண்டிக் கொழுப்பது என்னும் அடிப்படையில் அமையாது, சமத்துவம், பரஸ்பர அனுகூலம் என்னும் அடிப்படையில் அமைந்திருக்கும்.

5. ஐந்தாவது கோட்பாடுதான், உண்மையிலேயே எல்லாவற்றையும்விட கேந்திரமானது, முக்கியமானது. பல்வேறு நாடுகளும் பல்வேறு சமூக அமைப்புகளைப் பின்பற்றுவதற்கு உரிமையுண்டு என்பதை அங்கீகரிக்கிறது இக்கோட்பாடு. வெவ்வேறு சமூக அமைப்புகளும், சமூகமாக ஒன்றின் பக்கத்தில் ஒன்ருக, வாழமுடியாது, தவிர்க்கமுடியாதபடி ஆயுதமேந்திய மோதுதலில் இறங்காமலிருக்கமுடியாது என்னும் கருத்தை வன்மையாக எதிர்க்கிறது இக்கோட்பாடு.

# சமாதான இயக்கமும் ஐம்பெரும் கோட்பாடுகளும்

"இந்தக் கோட்பாடுகள் ஒரு சமாதான சாஸனமாக முடியாதா? முடியும் என்றே நான் நம்புகிறேன். இந்தியா, சீனு ஆகிய புராதன நாடுகளிலிருந்து வெளிப்பட்டுள்ள இக்கோட்பாடுகள், தேசங்களுக்கிடையிலுள்ள உறவுகளுக்கு அடிப்படையாக முடியும் என்றே நான் நம்புகிறேன்"

—டாக்டர் சைபுதீன் கிச்லு
(1954 மே மாதம் நடந்த உலக சமாதானக் கவுன்சில் கூட்டத்திற்கு அளித்த செய்தியிலிருந்து)

உலக சமாதான இயக்கம் ஸ்தாபிக்கப்பட்ட சமயத்தில், உலக சமாதானக் கவுன்சிலின் தலைவர் அறிஞர் ஜூலியட் க்யூரி அவர்கள் சமாதான இயக்கத்தின் கோட்பாடுகளை பின்வருமாறு வரையறுத்தார்:—

(1) உலகிலுள்ள வெவ்வேறு சமூக அமைப்புகளும், சமாதான பூர்வமான சகஜீவிகளாக வாழமுடியும்.

(2) தேசங்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகள், எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில், பேச்சுவார்த்தைகள், உடன் படிக்கைகள்மூலம் தீர்க்கப்படவேண்டும்.

(3) சகலநாட்டு மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்னும் கோட்பாட்டிற்கிணங்க, ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்கள் அந்நாட்டுப் பிரஜைகளின் சொந்தவிஷயம்.

உலக சமாதான இயக்கம், தான் தோன்றிய நாள்தொட்டு கடந்த 5 ஆண்டுகளாக, மேற்கூறிய கோட்பாடுகளின் வெற்றிக்காகப் பாடுபட்டுவந்துள்ளது. சமாதான இயக்கத்தின் இந்தக் கோட்பாடுகளும் ஐம்பெரும் கோட்பாடுகளும் ஒரே தன்மையனவேயாகும் என்று நாம் தைரியமாகக் கூறமுடியும்.

சகல நாடுகளின் சுதந்திர உரிமைக்காகவும், பிரதேச கட்டுக்கோப்பையும் அரசுரிமையையும் பாதுகாப்பதற்காகவும் உலக சமாதான இயக்கம் போராடிவந்துள்ளது.

சகலவகைப்பட்ட ஆக்கிரமிப்புகளையும், எந்தவொரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதையும் சமாதான இயக்கம் எப்பொழுதுமே எதிர்த்து வந்துள்ளது.

சமத்துவம், பரஸ்பர அனுகூலம் ஆகியவற்றின் அடிப்படையில் தேசங்களுக்கிடையில் கலாச்சார, பொருளாதார உறவுகள் வளர்க்கப் படுவதையே அது எப்பொழுதும் ஆதரித்துவந்துள்ளது. அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்கத்தின் வாயிலாகவோ, அன்றி ஒரு அரசுக்கு எதிராக மற்றொரு அரசு பயமுறுத்தல்களேயும், நிர்ப்பந்தங்களேயும் செய்வதின்மூலமோ, ஏற்படும் சகலவித சமத்துவமற்ற ஒருதலைப்பட்ச ஒப்பந்தங்களேயும், உடன்படிக்கைகளேயும் அது உறுதியுடன் எதிர்த்துவந்திருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, சமாதானபூர்வமான சகஜீவிகளாக வாழ்வது என்னும் கருத்தை, உலக சமாதான இயக்கம், சிரமேற் கொண்டு இடையருது பணியாற்றிவந்துள்ளது. உண்மையில், இதுவே, அதன் பூரா கொள்கையின், வேலையின் அஸ்திவாரமாக இருந்து வருகிறது. வெவ்வேறு சமூக அமைப்புகள், ஒன்றின் பக்கத்தில் ஒன்ருக, சமாதானபூர்வமாக வாழமுடியும். எனவேதான் சமாதான இயக்கம் தனது குறிக்கோள்களே ஈடேற்றப் பாடுபடுவதில், அளவு கடந்த தன்னம்பிக்கையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு, உலக சமாதான இயக்கம் நேரு-சௌவின் ஐம்பெரும் கோட்பாடுகளுக்கு ஆதரவளிப்பதின்மூலம், இவ்வளவு நாளாக அது எந்தக் கோட்பாடுகளுக்காக பாடுபட்டு வந்துள்ளதோ அதே கோட்பாடுகளுக்கு ஸ்தூலமான உருவம் அளிக்கின்றதேயல்லாமல் வேறில்லே.

சமாதான இயக்கம் தோன்றிய காலத்தில் எள்ளி நகையாடப் பட்டு, எதிர்ப்புக்கு ஆளான இக்கோட்பாடுகள், இன்றையதினம், சகல நாடுகளிலும் கோடிக் கணக்கானவர்களின் ஆதரவைப் பெற்றுள்ளது என்பதை சமாதான இயக்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. உலகிலேயே அதிகமான ஜனத்தொகையைக் கொண்ட இரு பெரும் நாடுகளின், மிகவும் விஸ்தாரமான அளவுக்கு செல்வாக்குப்படைத்துள்ள இரு நாடுகளின்—பிரதம மந்திரிகள் இக்கோட்பாடுகளே அங்கீகாரப் பணம் செய்துள்ளதே, இவற்றிற்கு உலக மக்களின் ஆதரவு மேலும் மேலும் பெருகி வருவதை பிரதிபலிக்கிறது. மேலும், இதுவே இன்னமும் விரிவான அளவுக்கு நல்லெண்ணம் படைத்த மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஆரம்பப் படியாக விளங்கமுடியும்.

இரு பிரதம மந்திரிகளின் மதிப்பும் செல்வாக்கும், எல்லா நாட்டிலுமுள்ள எல்லாப் பகுதிகளின் ஆதரவையும் முன்பின் கண்டிராத அளவுக்குத் திரட்டுவதற்கு உத்திரவாத மளிக்கிறது.

உலக சமாதானத்திற்கும், தேசங்களின் பாதுகாப்புக்கும், சுதந்திரத்திற்கும் உத்திரவாத மளிக்கவல்ல ஐம்பெரும் கோட்பாடுகளுக்கு ஆதரவாக மிகவும் விரிவான அணியைக் கட்டவேண்டுமெனில், நேரு-சௌ ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை சமாதான இயக்கம் முற்றிலும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

# ஐம்பெரும் கோட்பாடுகளின் எதிரிகள்

"நேரு–சௌ சந்திப்பினால் எவ்வித நன்மையும் ஏற்படாது என்பதே அமெரிக்காவின், அதன் சகாக்களின் கருத்து........"

—சி. ஈ. பிஷர், ஸ்கிரிப்ஸ்-ஹோவர்டு
அன்னிய நாட்டு விவகார ஆசிரியர்.

ஐம்பெரும் கோட்பாடுகள் முதலில் வெளியிடப்பட்டதும், அவை அருமையான கருத்துகளாயினும் கவைக்குதவா 'அபத்தக் குப்பையேயாகும்' என்று எள்ளி நகையாட முயற்சி செய்யப்பட்டது...... "இக் கோட்பாடுகளை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். எனவே இக் கோட்பாடுகளில் என்ன புதுமை இருக்கிறது?" என்று கேலி செய்தார்கள்.

ஆனால், எல்லோரும் இக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளுகின்றனர் என்பது உண்மையல்ல. எங்குமே பெரும்பான்மையான சாமான்ய மக்கள் இக் கோட்பாடுகளை ஆதரிக்கிறார்கள் என்பது மெய்யே என்றாலும், எல்லோரும் அவற்றை ஆதரிக்கிறார்கள் என்பது சரியல்ல. இதற்கு வெளிப்படையான காரணங்கள் இல்லாமலில்லை.....

சீனாவின் 60 கோடி மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரு சர்க்கார், ஐ. நா. வில் தனக்குரித்தான ஸ்தானத்தை வகிப்பதை அனுமதிக்க மறுப்பவர்கள், "தேசங்களின் அரசுரிமையையும் கட்டுக்கோப்பையும் மதித்து நடப்பதாக" எப்படிக் கூறிக்கொள்ள முடியும்?

சோவியத் யூனியனிலும், மக்கள் சீனாவிலும், மக்கள் ஜனநாயக நாடுகளிலும் கலவரங்களைத் தூண்டிவிடவும், நாசவேலையும் உளவு வேலையும் செய்வதற்குமென, அமெரிக்க சர்க்கார் கோடிக்கணக்கான டாலர்களை பகிரங்கமாக செலவிட்டு வருகிறது. மற்ற நாடுகளின், "அரசுரிமைக்கும் கட்டுக்கோப்பிற்கும் அவர்கள் கௌரவமளிப்பதை" எடுத்துக் காட்டும் லட்சணமா இது?

கௌதமாலாவில் சமீபத்தில் நடந்த ஆக்கிரமிப்பு பற்றிய உண்மைகள், அந்த ஆக்கிரமிப்பு அமெரிக்காவினால் துவக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு, வழி நடத்திச் செல்லப்பட்டது என்பதை தெட்டத் தெளிவாக நிரூபித்துவிட்டன. ஜினிவா பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்தபோது, வியத்நாமுக்கெதிராக, ஏன், சீனாவுக்கு எதி

ராகவும்கூட, அணுசக்தி, ஜலவாயு ஆயுதங்களைப் பிரயோகிக்கப்போவதாக அமெரிக்க அதிகாரிகள் பயமுறுத்திக்கொண்டிருந்தனர். காஷ்மீருக்கு எதிரான மலைஜாதியினரின் ஆக்கிரமிப்பில், அன்னியக் கரம் காணக்கிடந்தது என்பதும் யாருக்கும் தெரியாத இரகசியமல்ல.

பரஸ்பர அனாக்கிரமிப்பு என்பது ஒரு சமாதானக் கோட்பாடாக அங்கீகரிக்கப்படுவது, ஆக்கிரமிப்பையே தொழிலாகக் கொண்டுள்ளவர்களின் முகத்திலே, புன்னகையைப் பூக்கச் செய்யாது!

மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருக்கும் விஷயத்தை எடுத்துக்கொள்வோம். அமெரிக்க-பாக் ஒப்பந்தத்திற்கு அடிகோலும் பொருட்டு நஜிமுதீன் திடுதிப்பென்று அகற்றப்பட்டு அந்தப் பதவியில் முகம்மது அலி அமர்த்தப்பட்டுள்ளது, அமெரிக்காவின் தூண்டுதலாலும் தலையீடாலுமேயாகும். இதை இப்பொழுது எல்லோரும் தெளிவாகப் பார்க்கிறார்கள். மத்திய கிழக்கு நாடுகளில், அமெரிக்க ஏஜெண்டுகள் தூண்டிவிட்டு நடத்திய அரண்மனைப் "புரட்சி"களைப்பற்றி இன்று யாருக்குத்தான் தெரியாது? லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்கா தலையிட்டு ஒன்றன்பின் ஒன்றாக பல சர்க்கார்களைக் கவிழ்த்து வருகிறது; குட்டிப் "புரட்சி"களையும் அரசியல் கொலைகளையும் நடத்திவருகிறது. லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்கப் பகாசுரக் கம்பெனிகள் போட்டுள்ள மூலதனத்திற்குக் கொள்ளை லாபம் கிடைப்பதற்கு உத்திரவாதமளிக்கும் வகையில் தனது செல்வாக்கை நிலைநிறுத்திக்கொள்ளும் பொருட்டே, இந்தக் கைங்கரியங்களில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஐரோப்பாவில், மார்ஷல் உதவி என்னும் திரைமறைவிலும், இந்த "உதவி"யைக் குறைத்துவிடுவோம் என்று பகிரங்கமாக பயமுறுத்தல்கள் செய்வதின் மூலமும் மிகப்பெரிய நாடுகளின் உள்நாட்டு விஷயங்களில் அமெரிக்கா தலையிட்டு வருகிறது. தனது சொந்த நலன்களுக்கு எற்ப அந்நாடுகளின் கொள்கைகளை உருவாக்குவதே, இந்தத் தலையீட்டின் நோக்கமாகும். கடந்த இத்தாலியத் தேர்தலில், அமெரிக்க ஸ்தானிகர் பகிரங்கமாக தலையிட்டு வேலைசெய்தார். மற்ற நாடுகளின் உள்நாட்டு விஷயங்களில் தலையிடாதிருத்தல் என்னும் கோட்பாட்டிற்கு அமெரிக்கா எவ்வளவு தூரம் மரியாதை செலுத்துகிறது என்பதற்கு இதுவே மிகப்பெரிய சான்றாக விளங்குகிறது.

சமத்துவம்; பரஸ்பர அனுகூலம் என்னும் கோட்பாட்டைப் பொறுத்தவரையில், அமெரிக்க-பாக் ஒப்பந்தம் ஒன்றை மட்டும் சுட்டிக் காட்டினாலே போதும். அந்த ஒப்பந்தத்தின் விளைவுகளின் சுவையை பாகிஸ்தான் எற்கனவே அனுபவித்து வருகிறது; இதற்குப் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி திணிக்கப்பட்டுவிட்டது; சட்டபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார் பலாத்காரமாக அகற்றப்

பட்டுவிட்டது; பாகிஸ்தானில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துவதை எதிர்க்கும் நூற்றுக்கணக்கானவர்கள் வெஞ்சிறைகளிலே தள்ளப்பட்டுவிட்டனர். அமெரிக்க-பாக், ஒப்பந்தத்தினால் ஏற்பட்டுள்ள "பரஸ்பர அனுகூலம்"தான் என்னே ! என்னே !!

அமெரிக்காவின் பொருளாதார, இராணுவ "உதவி" ஒப்பந்தங்களின் லட்சணமும் இதுவேதான். இவற்றின் வாயிலாக, மூலதனம் போடுவதற்கும், கொள்ளையடிப்பதற்கு புதிய மார்க்கெட்டுகளுக்கும், யுத்த தளங்கள் அமைத்துக்கொள்வதற்கும், பீரங்கித் தீனிக்கும், வளமான செல்வாதாரங்களைச் சுரண்டுவதற்கும் அமெரிக்கா சலுகைகள் பெற்றுக்கொள்கிறது. இதற்குப் பிரதியாக அமெரிக்க "வாழ்க்கை வழி" என்னும் அந்த அழுகிப்போன சரக்கை—விபசார இலக்கியத்தையும், பலாத்காரத்தையும், கொலை கொள்ளை போன்ற கொடுங் குற்றங்களையும், கிறத்திமிர்வாதத்தையும், இவை போன்ற அதன் இதர "வரப்பிரசாதங்களை"யும்—அமெரிக்கா ஏற்றுமதி செய்கிறது.

சமாதானபூர்வமான சகஜீவிகளாக வாழ்தல் என்னும் கோட்பாட்டைப் பொறுத்தமட்டில், இந்த அற்புதமான வார்த்தைகளையே பழிக்கும் முறையில் அவற்றைக் கையாண்டுவரும் ஒரே ஒரு நாடு அமெரிக்காதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கம்யூனிஸ ஆவேஷத்தில் தன்னை மிஞ்சியவர்கள் யாருமில்லை என்று பெருமிதம் கொள்ளுபவரும், முதல் நெம்பர் யுத்த வெறியன் என்னும் பட்டம் பெற்றவருமான சர்ச்சில்கூட, வெவ்வேறு சமூக அமைப்புகள் சமாதானபூர்வமாக ஒருமித்து வாழமுடியும் என்னும் கோட்பாட்டிற்குத் தனது ஆதரவையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் டல்லசுக்கும், பிரசிடெண்ட் ஐசன்ஹோவருக்கும் அதைப் பற்றிக் கவலையில்லை. "வாழு, வாழ விடு" என்னும் கொள்கை அவர்களுக்கு வேண்டியதில்லை. ஐ. நா.வில் சீனா பிரவேசிக்காமல் தடுக்க வேண்டும் என்பதற்காக ஐ. நா.வையே இடித்து நொறுக்கவும் அவர்கள் தயார். சீனா அனுமதிக்கப்பட்டால். ஐ. நா. வை விட்டு வெளியேறப்போவதாக அவர்கள் பயமுறுத்துகிறார்கள்.

சோவியத் யூனியன், சீனா, மக்கள் ஜனநாயக நாடுகளின் சர்க்கார்களைச் சீர்குலைக்க உறுதி பூண்டுள்ளதாக அவர்கள் மானபங்கமின்றி பிரகடனம் செய்கிறார்கள். அந்நாடுகளின் சமூக அமைப்பை அவர்கள் விரும்பவில்லை. எனவே டாலர்கள், ஒற்றர்கள், நாசவேலை செய்யும் ரௌடிகளைக் குவித்து அந்த அமைப்பை உடைத்தெறிய வேண்டுமாம்!

சமீபத்தில், அமெரிக்க அடிவருடி சிங்மான் ரீயை, அமெரிக்காவில் வெகு ஆடம்பரமாக வெளிவரவிட்டு விளம்பரப்படுத்தினார்கள். அவன் எழுப்பிய யுத்த வெறிக் கூச்சலும், கம்யூனிசத்தை எதிர்த்து

இடையறாத, ஈவிரக்கமற்ற யுத்தம் நடத்துவோம் என்று அவன் போட்ட அதிர்வேட்டுகளும், வெறும் விளையாட்டல்ல. கொரியாவிலும், இந்தோ சீனாவிலும் யுத்தத்தை நீடிக்க முடியாமல், அமெரிக்கா தோல்வி அடைந்தபோதிலும், அதன் கை இன்னும் ஓங்கிதான் வருகிறது என்றும், அதன் கைக்கூலிகள் பந்தம் கையிலேந்தி இந்தப் பாருலகை மீண்டும் யுத்தத்தீக்கு இரையாக்கத் தயாராக நிற்கிறார்கள் என்றும் உலக முழுதிற்கும் பறைசாற்றும் அபாய அறிவிப்பே அவை.

ஐம்பெரும் கோட்பாடுகளை எதிர்ப்பவர்கள் யார், அக்கோட்பாடுகள் இக்கணமே ஒரு புதிய சமாதான சாஸனமாக அங்கீகரிக்கப்படுவதைத் தடுத்துவருபவர்கள் யார் என்பதை அறிந்துகொள்வது முக்கியம். ஏனெனில், இதை அறிந்துகொண்டால், பிரதான எதிரி எவ்வளவுதூரம் அபாயகரமான விஷமங்களைச் செய்யும் சக்தி படைத்திருக்கிறான் என்பது புலனாகிவிடுவதுடன், நமது வேலையை—ஐம்பெரும் கோட்பாடுகளுக்கு ஆதரவைத் திரட்டும் வேலையை—தீவிரப்படுத்துவதற்கு அது ஒரு தூண்டுகோலாகவும் இருக்கும். ஐம்பெரும் கோட்பாடுகளின் உண்மையான முழு அர்த்தத்தைக் கிரகிக்கச் செய்து, அதன் அடிப்படையில் அவற்றிற்கு ஆதரவைத் திரட்டும் வேலையை நாம் தீவிரப்படுத்துவதற்கு இது உதவியாகவிருக்கும்.

# ஆசியாவும் ஐம்பெரும் கோட்பாடுகளும்

"புதிதாக சுதந்திர வாழ்வில் பிரவேசித்துள்ள ஆசிய நாடுகளுக்கு, சமாதானம் என்பது வெறும் பக்தி சிரத்தையான நம்பிக்கைமட்டுமல்ல, ஒரு அவசரத் தேவையுமாகும்".

—பிரதமர் பண்டித நேரு (பார்லிமெண்ட் பிரசங்கம் 1954 மே 3-ந் தேதி)

ஆசிய மக்கள் நூற்றுக்கணக்கான வருடங்களாக, அன்னிய அரசுகளின் ஆதிக்கத்தின்கீழ் அவதிப்பட்டுள்ளனர். நமது ஆசிய மண், அன்னியர்களின் யுத்தகளமாக உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது. நமது செல்வாதாரங்கள் துராக்கிரகமாக இதர நாடுகளுக்கு ஏற்றிச் செல்லப்பட்டு வந்துள்ளன.

ஏகாதிபத்தியவாதிகள் புதிதாகக் கண்டுபிடித்துள்ள ஈவிரக்கமற்ற மனித விரோத ஆயுதங்களை பரீட்சித்து பரிசோதிப்பதற்கு ஆசியா அவர்களின் போர்க்களமாக்கப்பட்டதை, சமீப வருடங்களில் கண்டோம். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின், இருபிரதான யுத்தங்கள் ஆசியாவில்—அதாவது கொரியாவிலும், இந்தோசீனாவிலும்—நடத்தப்பட்டன என்பதை நாம் மறக்க முடியாது.

ஆசிய நாடுகளில் அன்னிய அரசுகளின் இராணுவத் தளங்கள் ஏற்படுத்தப்பட்ட வண்ணமிருக்கிறது என்பதையும் நாம் மறக்க முடியாது. ஆசியாவெங்கும் அன்னியத் தலையீடு நடந்துகொண்டிருப்பதையும், ஆசிய மண்ணிலிருந்து அன்னியத் துருப்புகள் இன்னமும் வெளியேறவில்லை என்பதையும், பாதுகாப்பு ஒப்புந்தங்கள் எனப்படும் போர்வையில் ஆசிய மக்கள் தொடர்ந்து ஒடுக்கப்பட்டுவருகின்றனர் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. இன்றும்கூட இரு பிரதமர்களும் சுட்டிக் காட்டியுள்ளதுபோல், ஆசிய மக்களுக்குள்ள அபாயம் உண்மையானது, அவ்வபாயம் ஆசியாவிற்கு வெளியிலிருந்தே தோன்றுகிறது என்பது முற்றிலும் சரியாகும்.

எனவே, ஆசியாவைப் பொறுத்தமட்டில், அன்னிய அரசுகளின் கீழிருந்துவரும் நீண்டகால அடிமை வாழ்வுக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆசிய மக்கள் தரக்கூடிய சரியான பதில் இந்த ஐம்பெரும் கோட்பாடுகளேயாகும். நேரு—சௌ சந்திப்புக்கு ஒரு மாதத்திற்கு முன்னபே பெர்லினில் மே மாதத்தில் நடந்த உலக சமாதானக் கவுன்சில் கூட்டத்தின்போது, இந்த ஐந்து கோட்பாடுகளும் தேசங்களுக்கிடையிலுள்ள உறவுகளுக்கு அடிப்படையாக அமைந்திருக்கவேண்டும் என்ற யோசனையை, இந்தியப் பிரதிநிதிகள் முன்வைத்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

உலக சமாதானக் கவுன்சிலின் முதல்நாள் கூட்டத்தின்போது, அகில இந்திய சமாதானக் கவுன்சில் தலைவர் டாக்டர் சைபுதீன் கிச்சுலுவிடமிருந்து வந்திருந்த ஒரு விசேஷ செய்தி வாசிக்கப்பட்டது. அதில் அவர் ஐம்பெருங்கோட்பாடுகளை விவரித்துள்ளதுடன் அவையொரு சமாதான சாஸனமாக வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியத் தூதுகோஷ்டியின் தலைவர் பண்டித சுந்தர்லாலும், இதர இந்தியப் பிரதிநிதிகளும் ஐம்பெரும் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்திப் பேசினார்கள். இதர நாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளும், இக்கோட்பாடுகளின் மகத்தான முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துகொண்டார்கள்.

இந்தியத் தூதுகோஷ்டியின் முயற்சியின் பயனாய், பர்மா, இலங்கை, சீனா, இந்தோனேஷ்யா, ஜப்பான், கொரியா, மங்கோலியா, சோவியத் யூனியன், வியத்நாம் முதலிய ஆசிய நாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளின் விசேஷக் கூட்டம் ஒன்று பெர்லினில் நடைபெற்றது. ஐம்பெரும் கோட்பாடுகளுக்கு இவர்கள்யாவரும் தமது ஆதரவைத் தெரிவித்து பின்வரும் கூட்டறிக்கையை வெளியிட்டனர்:—

"எவ்விதமான சால்ஜாப்பின் மூலமும் ஆசிய மண்ணில் அன்னிய இராணுவத் தளங்கள் இருந்து வருவதை அனுமதிக்க முடியாது. ஆசியாவின் பல பகுதிகளில் அன்னிய ஆதிக்கமும் அன்னிய இராணுவமும் தொடர்ந்து இருந்து வருவதையும், இப்பகுதிகளை பிரித்தாளும் சூழ்ச்சியின் மூலமும் பலவந்தமான இராணுவ ஒப்பந்தங்களின் மூலமும், ஒடுக்க எடுக்கப்படும் முயற்சிகளையும் தென்கிழக்காசிய, தூரகிழக்குப் பிரதேச மக்கள் ஒருகணமும் சகிக்கமுடியாது. அன்னியத் துருப்புகள் எங்கள் நாடுகளிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்று நாம் கோருகிறோம்."

"உலகில், நிலையான சமாதானம் தழைத்தோங்குவதற்காக, குறிப்பாக தென்கிழக்காசியாவிலும் தூரகிழக்குப் பிரதேசத்திலும் சமாதானம் நிலைபெறுவதற்காக, சகல நாடுகளுடனும் ஒன்று சேர்ந்து உழைப்பதென, நாங்கள் யாவரும் ஏகோபித்த உறுதி கொண்டுள்ளோம். பரஸ்பர அனுகூலம், ஒவ்வொரு நாட்டின் தேசசுதந்திரம், அரசுரிமை, பிரதேச கட்டுக்கோப்புக்கும் பரஸ்பரம் கௌரவளித்தல் என்னும் கோட்பாடுகளின் அடிப்படையில் உலக நாடுகள் தமக்கிடையில் நட்புறவும், கூட்டுறவும் கொள்வதின் மூலம் இதைச் சாதிக்க முடியும் என்று நாங்கள் திடமாக நம்புகிறோம்."

"கூட்டுப் பாதுகாப்பு, கூட்டுச் சமாதானம் என்னும் அதே குறிக்கோளுக்காக, எங்கள் நாடுகளுக்கிடையில், நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்குப் பாடுபடுவோம் என்று சபதமேற்கிறோம்."

எனவே ஐம்பெரும் கோட்பாடுகள் என்றால், ஆசிய மக்களின் சகோதரத்துவ ஒற்றுமை, ஒருமைப்பாடு என்று அர்த்தம்; உலக முழுவதற்கும் கூட்டுப் பாதுகாப்பு, கூட்டுச் சமாதானம் என்று அர்த்தம்.

# இந்தியாவும், ஐம்பெரும் கோட்பாடுகளும்

"முக்கியமாக சமாதானம் நிலைத்திருப்பதைப் பொறுத்திருக்கிறது, நமது நாட்டின் வருங்காலமும், இதர ஆசிய நாடுகளின் வருங்காலமும். நமது இயல்பான மனோபாவத்தின் காரணமாக மட்டுமின்றி, மேற்கூறிய காரணத்திற்காகவும் நாம் சமாதானத்திற்காக முயற்சிப்பதற்கு முதலிடம் தருகிறோம்."

—1954 ஜூலை 7ந் தேதி, பிரதேச காங்கிரஸ் தலைவர்களுக்கு பண்டித நேரு எழுதிய கடிதத்திலிருந்து.

உலக யுத்த அபாயத்தைப் பற்றி இந்திய மக்கள் வீணாக அலட்டிக்கொள்ளவேண்டியதில்லை என்று சிலர் கூறிவந்த காலம் மலையேறிப்போய்விட்டது. நடுநிலைமை வாதம் இனி நடைமுறைப் பாதுகாப்பாக இருக்கமுடியாது. அணுசக்திக்குத் தடைமதில்கள் ஏதுமில்லை; நடுநிலைமை நாடு எதிரி நாடு என்ற பேதா பேதமுமில்லை!

மேலும், நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிடினும் சரி, நமது நாடு தனது நடுநிலைமையைக் கைவிடும்படி பலவந்தமாக நிர்ப்பந்திக்கப்பட்டும் தாக்கப்பட்டும் வருகிறது. பாகிஸ்தானிலும், புதுவை கோவா போன்ற அன்னியத் திட்டுப் பிரதேசங்களிலும், இலங்கையிலும் யுத்த தளங்கள் நிறுவப்பட்டுள்ளதன் மூலம் நமது நாடு, இராணுவ ரீதியில் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. இது நமது நாட்டின் மீது நிரந்திரமான நிர்ப்பந்தத்தையும் பயமுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார "உதவி" என்னும் மாய்மாலத்தைப் பற்றி விவரிக்கத் தேவையேயில்லை. ஏனெனில், அன்னியர்கள் நமது நாட்டில் ஊடுருவிப் பாய்ந்து, சூழ்ச்சி மூலம் அடிமைத் தனத்தைத் திணிக்கும் வஞ்சக முறையே அது. பாகிஸ்தானிலும், போர்த்துகீசிய திட்டுப் பிரதேசங்களிலும் எடுக்கப்பட்டுவரும் யுத்த வெறி நடவடிக்கைகளின் அபாயகரமான விளைவுகளையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிடினும் சரி, இந்தோசீனப் பிரச்னையிலே, மிக முக்கியமான பாத்திரத்தை வகிக்கும்படி இந்தியா நிர்ப்பந்திக்கப்பட்டு வருகிறது. சகல சர்வதேசப் பிரச்னைகளிலும் குறிப்பாக ஆசியா சம்பந்தமான பிரச்னைகளிலும், தேசங்களின் சுதந்திர உரிமை பற்றிய பிரச்னைகளிலும், இந்தியா ஒரு சுதந்திரமான கொள்கையை மேற்கொண்டு, அப்பிரச்னைகளுக்கு வழிகாட்டவேண்டிய அவசியம் மென்மேலும் அதிகரிக்கத்தான் போகிறது.

ஒதுங்கியிருப்பது இனி சாத்தியமில்லை. கெடுபிடி யுத்தம் நமது தலைவாசலுக்கு வந்துவிட்டது. சமாதானத்தின் சிற்பி என்னும் பொறுப்பை நாம் சுமக்கவேண்டிய அவசியம் மென்மேலும் அதிகரித்தவண்ணமிருக்கிறது.

எல்லாவற்றையும் அதிகாரத்திலுள்ளவர்களிடம் விட்டுவிட்டால் போதாது. மக்கள் குரலின் சக்தியைப்பற்றி நாம் வலியுறுத்திக் கூறவேண்டியதில்லை. சமாதானத்தைப் பேணிக்காப்பதற்கு ஆதரவாக இந்தியா எடுத்துவரும் உருப்படியான நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக, நமது நாட்டிலுள்ள சக்திவாய்ந்த பகுதியினர் சிலர், சதிகார சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது நமக்கு நன்கு தெரியும். நமது கொள்கை, யுத்த வெறியர்களின் நலன்களுக்கேற்ப அமைந்திருக்கும்படிச் செய்வதே அவர்களின் நோக்கம் என்பதும் நமக்கு நன்கு தெரியும். எனவே, இச்சதிகளுக்கு எதிராக வெகுஜனங்களைத் திரட்ட வேண்டியதின் அவசர அவசியம் வெளிப்படை.

ஐம்பெரும் சமாதானக் கோட்பாடுகளுக்கு ஆதரவு தருவதென்னும் பிரச்னை, நமது மக்களின் மிகவும் விரிவான பகுதிகளைத் திரட்டவல்லதோர் பிரச்னையாகும். இவ்வாறு ஐம்பெரும் கோட்பாடுகளுக்கு ஆதரவு திரட்டுவதென்றால், அதன் ஸ்தூலமான அர்த்தமென்ன? இந்தியாவின் அரசுரிமையைப் பாதுகாப்பது என்பதேயாகும். சமாதானத்திற்கு ஆதரவாக சுயேச்சையான நடவடிக்கைகளை மேலும் மேற்கொள்ளாதவாறு தடுப்பதற்காக இந்தியாமீது பலமுறுத்தல்களும் நிர்ப்பந்தமும் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இதற்கெதிராக தனது கொள்கையையும் வாழ்வையும் தான்விரும்பியபடி தீர்மானித்துக் கொள்ளுவதற்கு இந்தியாவிற்கு உரிமை உண்டு. ஐம்பெரும் கோட்பாடுகளுக்கு ஆதரவு தருகிறோம் என்றால், இந்த உரிமையைப் பாதுகாக்கப் போராடுகிறோம் என்பதே அர்த்தம். மேலும் இத்தகைய ஆதரவின் அர்த்தம், ஆசியாவைப் பிளவுபடுத்தி அதன் சுதந்திரத்தை நசுக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராக ஆசியாவின் சகல நாடுகளுடனும், குறிப்பாக சீனுவுடனும் ஒன்றுபடுகிறோம் என்பதுமாகும். இத்தகைய ஆதரவின்மூலம், யுத்த ஆக்கிரமிப்பு பீதிகள் ஒழியும்; மனிதவர்க்கத்தின் செல்வாதாரங்கள் யுத்த தளவாட உற்பத்தியில் வீணுக்கப்படுவது மறையும்; இதன் விளைவாய் இச்செல்வங்கள் நமது நாடுபோன்ற நாடுகளின் வளர்ச்சிக்குப் பயன்படும்.

நமது சொந்த நாட்டின், அதேபோல் ஏனைய நாடுகளின் இன்ப வாழ்விலும் சுபீட்சத்திலும் அக்கறைகொண்டுள்ள ஒவ்வொரு இந்தியனும் உடனடிச் செய்யவேண்டிய கடமை ஒன்று உள்ளது. சமாதானம், தேசசுதந்திரம், ஆசிய ஒற்றுமைப்பாடு ஆகியவற்றிற்காக ஐம்பெரும் கோட்பாடுகளின் அடிப்படையில், ஒரு மிகப்பெரிய விரிவான இயக்கத்தை கட்ட முன்வருவதே அப்பணி.

---

ஜனசக்தி பிரஸ், சென்னை-6.